**பதவிஸ்ரீபுர பிரதேச சபை - 2023**
**------------------------------------------------------**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

பதவிஸ்ரீபுர பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயற்பாட்டுக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களும் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களுடனான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவிஸ்ரீபுர பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு

அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா

எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்டங்கள், விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | ரூபா 486,450 செலவில் கொள்வனவு செய்த நீரில் மூழ்கக்கூடிய 4 குதிரை சக்தி கொண்ட மோடர் மற்றும் உந்தியின் பெறுமதி மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் செய்வதென. | சரி | கணக்குகளை சரியாக தயாரிக்க வேண்டும். |
| (ஆ) | நிலையான வைப்பு வட்டியின் மீது வங்கியினால் நிறுத்தி வைத்த வரித் தொகையை கணக்கிட்டு கணக்குகளில வெளிப்படுத்தியிருக்கவில்லை. இதன் காரணமாக ஆண்டின் வருமானம் மற்றும் செலவினம் குறைவாக பிரதிபலித்தது. | எதிர்காலத்தில் செய்வதென. | சரி | -மேற்படி- |
| (இ) | அன்பளிப்பாகக் கிடைத்த ரூபா 507,330 பெறுமதியான பின்வரும் பண்டங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் செய்வதென. | சரி | -மேற்படி- |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| விடயம் | நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் பெறுமதி<br>ரூபா | நேரொத்த அறிக்கை பிரகாரம் பெறுமதி<br>ரூபா | வேறுபாடு<br>ரூபா | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| நிலுவை கடையறை வாடகை | 51,753 | 7,800 | 43,953 | எதிர்காலத்தில் கணக்கு புத்தகங்களை சரியாக நடாத்திச் செல்வதென. | பதிவேடுகளை உரியவாறு பேணிக் கொள்ள வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| | விடயம் | தொகை<br>ரூபா | வழங்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | காணி மற்றும் கட்டிடங்கள் | 136,154,756 | உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணம், அளவையியல் திட்டம். | காணி மற்றும் கட்டிடங்கள் - சட்ட ரீதியான உரிமையை சுவீகரிக்க தேவையான ஆவணங்களை பதவிஸ்ரீபுர பிரதேச செயலகத்திற்கு சமர்ப்பித்துள்ளதென. | கணக்கு விடயங்களிற்கான சரியான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நீர் களஞ்சியம் | 1,524,081 | இருப்பு பதிவேடுகள், மீதிப் பட்டியல்கள். | சரியான தகவல்களை சமர்ப்பிப்பதென. | -மேற்படி- |
| (இ) | வருமானம் கடன்படுனர் | 11,815,086 | தனி நபர் மீதி பட்டியல், காலப்பகுப்பாய்வு. | சரியான தகவல்களை சமர்ப்பிப்பதென. | -மேற்படி- |
| (ஈ) | நிலுவை நீர் பட்டியல்கள் | 743,937 | தனி நபர் மீதி பட்டியல். | சரியான தகவல்களை சமர்ப்பிப்பதென. | -மேற்படி- |
| (உ) | செலவின கடன்கொடுனர் | 10,454,717 | தனி நபர் மீதி பட்டியல், காலப்பகுப்பாய்வு. | சரியான தகவல்களை சமர்ப்பிப்பதென. | -மேற்படி- |

## 1.7 இணங்காமைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம் | | | |
| (i) | 24 பிரிவு | சபையினால் நிர்மாணிக்கப்பட்ட பாதைகள் இன்வென்றியிற்கு உட்படுத்தியிருந்ததுடன் அவ் அனைத்து பாதைகளையும் வர்த்தமானியில் பிரசுரிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் இவை அனைத்தையும் பூரணப்படுத்தி வர்த்தமானியில் பிரசுரிக்க நடவடிக்கை எடுப்பதென | பிரதேச சபை சட்டம் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | 119 பிரிவு | வாராந்த சந்தை ஒழுங்குபடுத்தலிற்காக துணைச் சட்டம் விதித்திருக்கவில்லை. | எதிர்காலத்தில துணைச் சட்டம் விதிப்பதென. | பிரதேச சபை சட்டம் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) | 126 பிரிவு | சபை பிரதேசத்தில் புதிதாக வருமானம் ஈட்டும் வகையில் துணைச் சட்டம் விதித்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் உரிய திட்டத்துடன் துணைச் சட்டம் விக்கவும் இன்னும் புதிய வருமானங்களை ஈடுக்கூடிய துணைச் சட்டம் விதிக்க நடவடிக்கை எடுப்பதென. | - மேற்படி - |
| (iv) | 134 பிரிவு | சபை அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள முன்னேற்றமடைந்த பிரதேசங்களை காலத்திற்கு காலம் இனங்கண்டு வீதவரியும் வரிகளும் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | மதிப்பீட்டறிக்கையை அழைப்பித்து எதிர்காலத்தில் விரைவில் வீதவரி விதிப்பதென. | பிரதேச சபை சட்ட பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (v) | 159 பிரிவு | மீளாய்வாண்டு இறுதியில் அறிவிட வேண்டிய ரூபா 955,241 ஆன நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | நிலுவை வருமானத்தை விரைவில் அறவிட நடவடிக்கை எடுப்பதென. | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதிக் கோவை | | | |
| (i) | 193 ஆம் விதி | பாதீடு மற்றும் குறைநிரப்பு அங்கீகார செலவுகளுடன் செலவின விடயங்களின் உள்ளவாறான செலவுகளை ஒப்பிட்டு மிகை மற்றும் பற்றாக்குறைகளிற்கான காரணம் காட்டும் கூற்றுக்களை கணக்குகளுடன் சமர்ப்பித்திருக்கவில்லை. | 2024 இறுதிக் கணக்குகளில் சரி செய்வதெென. | பிரதேச சபை நிதி மற்றும் நிர்வாக விதி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | 218 ஆம் விதி | கிரயம் ரூபா 136,154,757 ஆன காணி மற்றும் கட்டிடங்களை பரீட்சிக்க வேண்டிய போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரிசெய்வதென. | பிரதேச சபை நிதி மற்றும் நிர்வாக விதி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2006 இன் 12 கொண்ட முத்திரை வரி விஷேட ஏற்பாட்டுச் சட்டம் | சம்பளத்திலிருந்து அறவிடப்படும் முத்திரை கட்டணத்தை அடுத்த மாதம் 15 திகதிக்கு முன்னர் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்ப வேண்டிய போதும் 2019 ஆண்டு முதல் 2023 திசெம்பர் மாதம் வரை சம்பளத்திலிருந்து கழிக்கப்பட்ட ரூபா 33,425 பெறுமதியான முத்திரை கட்டணம் தொடர்பாக அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. | விரைவில் சரிசெய்வதென. | முத்திரை வரி விஷேட ஏற்பாட்டுச் சட்ட பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | நீதிமன்ற அமைச்சின் செயலாளரின் இலக்கம் 04/1994 மற்றும் 1994 பெப்ரவரி 18 திகதிய சுற்றறிக்கை | ஓவ்வொறு பதவிநிலை உத்தியோகத்தரினாலும் வருடாந்தம் தமது சொத்துக்கள் பொறுப்புக்களை வெளிப்படுத்த வேண்டிய போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதென. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,946,727 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 713,438 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| வருமான மூலம் | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| வாடகை | 700 | 647 | 640 | 51 | 600 | 566 | 566 | 44 |
| அனுமதிப் பத்திர கட்டணம் | 500 | 746 | 740 | 167 | 675 | 549 | 549 | 161 |
| ஏனைய வருமானம் | 12,000 | 15,127 | 14,383 | 1,307 | 10,000 | 8,463 | 8,028 | 563 |
| கூட்டுத் தொகை | **13,200** | **16,520** | **15,763** | **1,525** | **11,275** | **9,578** | **9,143** | **768** |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபை கடமைக்கிடையில் பிரதான கடமையாக அதிகார எல்லையினுள் மேற்கொள்ளும் காணி அபிவிருத்தி நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தல் மேற்கொள்ள வேண்டிய போதும், 2020 மற்றும் 2021 ஆண்டுகளிற்காக அபிவிருத்தி அனுமதிப்பத்திரங்கள் ஒன்று வீதமும் 2022 ஆண்டிற்காக எதனையும் விநியோகித்திருக்காததுடன் 2023 ஆண்டிற்காகவும் ஒரு அவிவிருத்தி அனுமதிப் பத்திரம் மாத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு ஆயினும் அதிகார பிரதேசத்தில் அனுமதியற்ற நிர்மாணங்கள் எதுவும் அறிக்கையிடப்படாததனால் இந்த கடமைகள் சிறப்பான முறையில் ஒழுங்குபடுத்தப்படவில்லை என உறுதியானது. | எதிர்காலத்தில் சரி செய்வதென. | கட்டிட நிர்மாணங்களை சிறப்பாக ஒழுங்குபடுத்த வேண்டும். |
| (ஆ) | சபைக்கு சொந்தமாக திண்மக் கழிவு முகாமைத்துவம் தொடர்பாக சரியான திட்டமொன்று இருக்கவில்லை. எவ்வாறாயினும் நகரில் கழிவுகளை | தேவைபாட்டின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதென. | திண்மக் கழிவு முகாமைத்துவ நடவக்கைகளை முறையாக |

| | | | |
|---|---|---|---|
| | வேறாக்கி பெற்றுக் கொள்ள 2022 ஆண்டில் ரூபா 959,820 செலவில் குப்கை தொட்டில்களை கொள்வனவு செய்திருந்த போதும் வேறாக்கிய கழிவுகளை பெற்றுக் கொள்ளும் போது டெக்கரின் டேலரை அவ்வாறு பிரித்திருக்காததால் வேறாக்கிய கழிவுகள் மீண்டும் கலப்பதால் அதற்காக பயன்படுத்தியிருந்த முயற்சி தோல்வியடைந்திருந்தது. | | மேற்கொள்ள வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான இலங்கை வங்கி நடைமுறை கணக்கில் 2023 சனவரி மாதம் முதல் திசெம்பர் மாதம் வரை ஒவ்வொரு மாத இறுதியிலும் பாரிய தொகையை நிறுத்தி வைத்திருந்தது. இது நிதி முகாமைத்துவ செயற்திறனின்மை ஒன்றாக அவதானிக்கப்பட்டது. இத் தொகையை நிலையான வைப்புக் கணக்ககொன்றில் முதலீடு செய்திருந்தால் நிலவும் வட்டி வீதங்களின் பிரகாரம் ரூபா 617,490 ஆன வருமானத்தை ஈட்டிக் கொள்ள முடியுமாக இருந்த போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருகக்வில்லை. | பிரதேச சபையின் கீழ் ரூபா 1,505,763.84 ஆன நிலையான வைப்பொன்றை பேணிச் செல்வதுடன் இந்த 6635422 எனும் இலங்கை வங்கி நடைமுறைக் கணக்கில் காணப்படும் மீதி அவசர கொள்வனவு (நீர் உந்திகள் போன்றன) இற்கான நோக்கத்தில் பேணிச் செல்வதுடன் தயவுடன் அறிவுறுத்துகிறேன். | வருமான நிர்வாகம், நிதி முகாமைத்துவத்தை சிறப்பாக மேற்கொள்ள வேண்டும். |

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 388,148 ஆன முற்பணம் மீதியை தீர்ப்பதற்கு முறையான வேலைத் திட்டமொன்றை பின்பற்றி இருக்கவில்லை. | பல ஆண்டுகளாக முற்பண கணக்கு மீதிகள், ஒப்பந்த வைப்பு மீதிகள் மற்றும் பொது வைப்பு கணக்கின் மீதிகள் காணப்படுவதுடன் இவற்றை முறையாக தீர்ப்பதற்கு முகாமைத்துவ குழுக் கூட்டத்தில் மற்றும் கணக்காய்வு முகாமைத்துவ குழுக் கூட்டத்தில் கலந்துரையாடி நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுப்பதென தயவுடன் அறிவிக்கிறேன். | முற்பணத்தை சிறப்பாக தீர்க்க வேண்டும். |
| (ஆ) | தொடர்ந்தும் நிலவிவரும் ரூபா 3,256,708 ஆன ஒப்பந்த வைப்புக்களை விடுவிக்க அல்லது | எதிர்காலத்தில் சரியாக நடவடிக்கை எடுப்பதென. | ஒப்பந்த நிர்வாகத்தை சிறப்பாக |

| | | | |
|---|---|---|---|
| | பொருத்தமானவாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | மேற்கொள்ள வேண்டும். |
| (இ) | பெறுமதி ரூபா 1,745,236 ஆன பொது வைப்புக்களை இனங்கண்டு தீர்க்க அல்லது வருமானத்திற்கு எடுக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரி செய்வதென. | வைப்பு கணக்கை சிறப்பாக பேணிக் கொள்ள வேண்டும். |

**3.4 விளைவற்ற அல்லது குறை பயன்பாட்டு ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலக்கம் 02/2017 கொண்ட 2012 திசெம்பர் 21 திகதிய சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை பிரகாரம் பிரதேச சபைக்குரித்தற்ற கிரயம் ரூபா 18,009,050 ஆன 05 வாகனங்களை உரிய முறையில் சுவீகரிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சுவீகரிக்கும் நடவக்கைகளை விரைவில் மேற்கொள்வதென. | சொத்துக்கள் முகாமைத்துவத்தை சிறப்பாக மேற்கொள்ள வேண்டும். |

**3.5 மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் அங்கீகார ஆளணியினர் மற்றும் உள்ளவாறான ஆளணியினரை கவனத்திற் கொள்ளும் போது 11 பதவிகளில் 18 வெற்றிடங்கள் காணப்பட்டன. | இது தொடர்பாக விரைவில் நடவடிக்கை எடுக்குமாறு குறித்த பிரிவை அறிவுறுத்தியுள்ளதென. | வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | பிணை வைக்க வேண்டிய அலுவலர்கள்/ ஊழியர்கள் கிழக்கு மாகாண நிதி சுற்றறிக்கை PT/03/2021 பிரகாரம் பிணை வைக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் மற்றும் சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்**

**4.1 உள்ளக கணக்கய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் உள்ளக கணக்காய்வு பிரிவொன்றை ஸ்தாபித்திருந்ததுடன் நடைமுறை ஆண்டின் போது உள்ளக கணக்காய்வு நிகழ்சித் | ஏதிர்காலத்தில் சரி செய்வதென. | உள்ளக கணக்காய்வினை முறையாக்க வேண்டும். |

திட்டத்தை இனங்கண்டிருக்கவில்லை. அவ்வாறே உள்ளக கணக்காய்வு திட்டமொன்றை தயாரித்து தேசிய கணக்காய்வு அங்கீகாரத்தை பெற்றுக் கொண்டிருக்கவில்லை.

## 4.2 பாதீட்டு கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீடு பிரகாரம் பாதிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினங்களை உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினங்களுடன் ஒப்பிடுகையில் 06 வருமான விடயங்களில் 13.97 சதவீதம் முதல் 818.33 சதவீதம் வரையும், 05 செலவின விடயங்களில் 11.66 சதவீதம் முதல் 78.92 சதவீதம் வரையும் விலகல்கள் அவதானிக்கப்பட்டததனால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டு சாதனமொன்றாக பயன்படுத்தப்படவில்லையென அவதானிக்கப்பட்டது. | பதில் வழங்கப்படவில்லை. | பாதீடு நடைமுறை சாத்தியமானதாக தயாரிக்கப்பட வேண்டும். |

## 4.3 சுற்றாடல் பிரச்சினை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்திற்கு மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையும் வகைப்படுத்தப்பட்டு சேகரிக்கப்படும் கழிவுப் பொருட்கள் மீண்டும் கலக்கப்படுதலும், அவை சுதந்திரமாக சுற்றாடலிற்கு வெளிவிடப்படுவனாலும் வெள்ளம் ஏற்படும் சந்தர்ப்பங்களை போன்றே கடும் மழை காலங்களில் முறையற்றதாக வெளிவிடப்பட்ட கழிவுப் பொருட்கள் நீர் வாயில்களிற்கு கழுவிச் செல்லப்படுவதால் நீர்வாழ் உயிரினங்களுக்கு போன்றே வன சீவராசிகளிற்கு மற்றும் மனித வர்க்கத்தினரிற்கும் சுற்றாடல் பிரச்சினைகளிற்கு முகங்கொடுக்க ஏற்படுவதாக அவதானிக்கப்பட்டது. | சுற்றாடலிற்கு ஏற்படும் சேதம் குறையும் வகையில் நடவடிக்கை எடுப்பதென. | கழிவுப் பொருன் முகாமையை சிறப்பாக மேற்கொள்ள வேண்டும். |